கவிதைப்பேழை

இயல் இரண்டு

# புதுமை விளக்கு




உள்ளத்தூய்மையோடு நன்னெறியில் நடப்பதே சான்றோரின் இயல்பு. வழிபாட்டில் சடங்குகளை விட உள்ளத் தூய்மையே முதன்மையானது. இயற்கையையும் தம் உள்ளத்து அன்பையும் விளக்காக ஏற்றி வழிபட்ட சான்றோர்களின் பாடல்களைக் கற்று மகிழ்வோம்.

*வையம் தகளியா வார்கடலே நெய்யாக*
*வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய*
*சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை*
*இடர்ஆழி நீங்குகவே என்று**

*– பொய்கையாழ்வார்*

## சொல்லும் பொருளும்

வையம் – உலகம்

வெய்ய – வெப்பக்கதிர் வீசும்

சுடர்ஆழியான் – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்

சொல்மாலை – பாமாலை

இடர்ஆழி – துன்பக்கடல்

## பாடலின் பொருள்

பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், வெப்பக்கதிர் வீசும் கதிரவனைச் சுடராகவும் கொண்டவன் திருமால். சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடைய அவனது திருவடிகளுக்கு என் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினேன்.

**எதுகை –** சுடர்ஆழியான் – இடர்ஆழி

### உருவக அணி

உவமை வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும். இதில் உவமிக்கப்படும் பொருள் முன்னும், உவமை பின்னுமாக அமையும்.

இப்பாடலில் பூமி அகல்விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, இப்பாடலில் அமைந்துள்ளது உருவக அணி ஆகும்.



7th Std - Tamil_2025_Term_III_Unit 2.indd 20 23/01/2025 14:31:18